# 10 தனியாள் தேவைகளுக்கான துணிவகைகளை இனங்கண்டு ஆடைகளைத் தயாரிப்பர்

## 10.1 குழந்தைகளுக்கான ஆடை தயாரித்தல்

வைத்தியசாலையில் தங்கியிருக்கும் எனது தோழியைப் பார்ப்பதற்காக மு.ப. 11.00 மணிக்கு பஸ்ஸில் ஏறினேன். நான் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்னால் உள்ள ஆசனத்தில் பத்து மாதக் குழந்தையுடன் ஒரு இளம் தம்பதியினர் அமர்ந்திருந்தனர். குழந்தை அழுது கொண்டிருந்ததால் பையில் இருந்த பால்போத்தலை குழந்தையின் வாயில் வைப்பதற்குத் தாய் முயற்சித்தாலும் அது வெற்றியளிக்கவில்லை. குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டு இருந்தது. “சுகமில்லை போலும் தாயாவது பால் கொடுக்கலாமே” என ஒருவர் சொல்வதனைக் கேட்டேன். குழந்தையினை அமைதிப்படுத்துவதற்கு தாயும் தந்தையும் முயற்சித்தாலும் வெற்றியளிக்கவில்லை. என்பதனை அவதானித்து நான் ‘‘குழந்தையின் உடையையாவது கழற்றிப் பார்க்கலாம்’’ எனக் கூறினேன். தாய் அதனை அவ்வளவு பொருட்படுத்தாவிட்டாலும் குழந்தையின் உடையினைக் கழற்றினாள். சிறிது நேரத்தில் குழந்தையின் அழுகை நின்றது. இத்தகைய அனுபவங்கள் உங்களுக்கும் ஏற்பட்டு இருக்கலாம்.




உரு 10.1 குழந்தை அணிந்து இருந்தது இவ்வாறான உடையாகும்.

குழந்தை அழுகையை நிறுத்தியதற்கான காரணத்தை நீங்கள் அறிவீர்களா? காரணத்தை தேடியறிவோம்.


குழந்தையின் உடை விலை உயர்ந்த துணியால் பல்வேறு சுருக்குகள் வைத்துத் தைக்கப்பட்ட ஓர் அழகிய உடையாகும். எனினும், இது குழந்தையின் சருமத்திற்கு உகந்ததல்லாத செயற்கைத் துணியால் தைக்கப்பட்டிருந்தது. எனவே, இது குழந்தைக்குப் பொருத்தமற்றது.

குழந்தைப் பருவம் என்பது பிறந்தது முதல் - 12 மாதங்களுக்கிடைப்பட்டதாகும். இவ்வயதில் குழந்தை ஆரோக்கியமாக இருந்தாலும் அதன் உடல் விசேட வடிவம் கொண்டிருப்பதில்லை. குழந்தையின் உடல் மிருதுவானது. எனவே, அதற்கேற்றவாறு உடை அமைக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

### குழந்தை உடலின் இயல்பு



உரு 10.2




உரு 10.3

| குழந்தை ஆடையின் தன்மை | அதனால் கிடைக்கும் நன்மை |
| --- | --- |
| 1. தளர்வு | • தலையையும் அங்கங்களையும் சுதந்திரமாக அசைத்தல்<br>• உடலுக்கு சூரிய ஒளியும், வளியும் சுதந்திரமாகக் கிடைத்தல்<br>• உடல் வளர்ச்சிக்கு இடைஞ்சல் ஏற்படாது இருத்தல் |
| 2. இலகுவான பாங்கு | வியர்வையை இலகுவாக உறிஞ்சுவதற்கு வசதியாயிருத்தல் |
| 3. மூட்டு இல்லாத அல்லது குறைவான மூட்டு | • உடலுக்கு உராய்தல் குறையும். |
| 4. அணியவும் கழற்றவும் இலகுவாக இருத்தல் | குழந்தை இயக்கத்தில் சிரமம் ஏற்படாதிருத்தல் |
| 5. எளிய, பலவித அலங்காரங்களைச் செய்தல் | குழந்தைகளின் உடல் சிறியது. எனவே, சிறிய சாதாரண அலங்காரங்களைச் செய்தல் |

**குழந்தை உடைக்கான மாதிரி உரு நிர்மாணித்தல்**

மாதிரி உரு வரைதல், துணியை வெட்டுதல், தைத்தல் ஆகியவற்றிற்குத் தேவையான கருவிகளையும் பொருள்களையும் பார்ப்போம்.

| தேவையான கருவிகள் | பொருள்கள் |
| --- | --- |
| **மாதிரியுரு தயாரிப்பதற்கு**<br>• பென்சில்<br>• அடிமட்டம்<br>• அளவு நாடா<br>• சுவடுவரைசில்லு | • சதுரக் கோட்டுக் கடதாசி<br>($\frac{1}{2}cm$ சதுரங்கள் உள்ளது)<br>• துணிக்காபன்<br>• கபில நிறத்தாள் (Brown paper) |
| **வெட்டுவதற்கு**<br>• கடதாசி வெட்டும் கத்தரிக்கோல்<br>• துணிவெட்டும் கத்தரிக்கோல்<br>• குண்டூசி | • தயாரித்துக் கொண்ட மாதிரி உரு<br>• காபன் தாள்<br>• உடைக்கான துணி |
| **தைப்பதற்கு**<br>• ஊசி<br>• தீதாள் (Needle Case) | • துணியின் நிறத்தில் நூல்<br>• பலவித நிறங்கள் உள்ள நூல்<br>• அழகுபடுத்தும் அலங்காரங்கள்<br>• குழந்தைகள் றிபன் (Baby Ribbon)<br>சிறுவர் நாடா (Baby Tape) |

அட்டவணை 10.1

**ஒப்படை -01**

10.1 இலக்க அட்டவணையினைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

| உடை அமைப்பின்போது தேவைப்படும் கருவிகளும், உபகரணங்களும் | தொழிற்பாடு |
| --- | --- |
| 1. பென்சில் | மாதிரியுரு வரைவதற்கும் தேவையான வடிவத்தை பதித்துக்கொள்வதற்கும். |
| 2. | |

குழந்தையின் உடல் இயல்புக்கு ஏற்ப அளவுகள் எடுக்காமலேயே குழந்தை உடைக்கான மாதிரி உருவைத் தயாரித்துக்கொள்ளலாம். ஒரு குழந்தையின் சாதாரண அளவுகளுக்கு ஏற்பத் தயாரித்துக் கொண்ட அளவுகளின் அட்டவணையினை இங்கு பயன்படுத்திக்கொள்ளலாம். இது இவ்வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பொருத்தமானது. இவ்வளவுகளை அறிந்துகொள்வோம்.

| **உடல் பகுதிகள் (தேவையான அளவுகள்)** | | **முன்** | **பின்** |
|---|---|---|---|
| • கழுத்து அகலம் | AB | செ.மீ 4.7 | செ.மீ 4.7 |
| • கழுத்து ஆழம் | AC | செ.மீ 4.7 | செ.மீ 1.0 |
| • முதலாவது குறுக்கு அளவு (கழுத்தைச்சுற்றி) | CD | செ.மீ 9.5 | செ.மீ 9.7 |
| • இரண்டாவது குறுக்குக் கோடு (கழுத்திலிருந்து 4.5 cm கீழாக) | EF | செ.மீ 10.0 | செ.மீ 10.0 |
| • மார்பளவு (இரண்டாவது குறுக்கு அளவுக்கு 5 cm கீழாக பின்பக்கம் 6 cm கீழாக | GH | செ.மீ 13.0 | செ.மீ 13.0 |
| • கைக்குழைச்சடி பக்கத்தின் இறுதிப் புள்ளி | HP | செ.மீ 3.0 | செ.மீ 0.5 |
| • தோள் அகலம் | BJ | செ.மீ 5.0 | செ.மீ 5.0 |
| • தோட்சரிவு | JK | செ.மீ 1.0 | செ.மீ 1.0 |
| • உடையின் உயரம் | AL | செ.மீ 30.0 | செ.மீ 30.0 |
| • உடையின் கீழ்ப் பகுதி அகலம் | LM | செ.மீ 13.0 | செ.மீ 13.0 |
| • வடிவத்துக்கான மேலதிக பகுதி | MN | செ.மீ 4.5 | செ.மீ 4.5 |
| • பக்கப்பொருத்து வடிவமைப்புக்காக | NR | செ.மீ 1.0 | செ.மீ 1.0 |

இந்த அளவுத் திட்டத்தை நன்றாக அவதானிக்கவும். அட்டவணை 10.3

**செயற்பாடு - 1 முன்பக்க மாதிரி உரு**


வழங்கப்பட்டுள்ள சதுர கோட்டுத் தாளைப் பயன்படுத்தி, குழந்தை ஆடை ஒன்றின் முன், பின் மாதிரி உருக்களின் அமைப்பை வரைந்து கொள்க (அளவுதிட்டம் 1செ.மீ = 1 செ.மீ.சதுரம்).

- ஒன்றுக்கு ஒன்று செங்குத்தாக இருக்கும் வண்ணம் இரு நேர் கோடுகளை வரைக. அவை சந்திக்கும் புள்ளியை A எனக் குறிக்குக.
- A யிற்கு வலது பக்கமாக 4.7cm தூரத்தைக் குறித்து அதனை B எனவும் A இல் இருந்து கீழ்நோக்கி 4.7cm ஐ குறித்து C எனவும் முறையாகப் பெயரிடுக.
- BC ஐ வளைந்த கோட்டினால் இணைத்து முன்பக்க கழுத்தின் அமைப்பினை வரைந்து கொள்க.
- B இல் இருந்து வலது பக்கமாக 5 cm க் குறித்து J எனப் பெயரிடுக (தோள் அகலம்).
- J இல் இருந்து கீழாக 1 cm ஐ குறித்து K எனப் பெயரிடுக (தோள் சரிவு).
- BK புள்ளிகளை இணைப்பதன் மூலம் தோள் சரிவின் அமைப்பை வரைக. தோளின் நீளத்தை மீண்டும் சரிசெய்து கொள்க (5cm).
- C இலிருந்து வலதுபக்கமாக முதலாம் குறுக்களவு (முன்பக்க) 9.5 cm ஆகும் வண்ணம் குறித்து D எனப் பெயரிடுக.
- C இலிருந்து கீழ்நோக்கி 4.5cm குறித்து E எனப் பெயரிடுக.
- E இலிருந்து வலதுபக்கமாக 10cm ஐக் குறித்து F எனப் பெயரிடுக. இரண்டாவது குறுக்களவான EF ஐ இணைக்க.
- E இலிருந்து 5cm கீழ்நோக்கி G உம் G இலிருந்து வலதுபக்கமாக 13cm தூரத்தை குறித்து H எனப் பெயரிடுக. இது மார்பளவாகும்.

- H இல் இருந்து 3cm மேல்நோக்கி கையின் அமைப்பை முடிக்கும் புள்ளி P ஐக் குறிக்க.KDFP புள்ளிகளை இணைத்து கையின் அமைப்பை வரைக.
- A இலிருந்து கீழாக ஆடையின் உயரமான 30cm ஐ அளந்து L எனக் குறித்து L இற்கு வலப்புறமாக மார்பின் அளவுக்கு சமமாக 13 cm ஐக் குறித்து M எனக் குறிக்க.
- M இல் இருந்து வலது பக்கமாக உடையின் கீழ் விளிம்புத் தளர்வுக்காக 4.5cm ஐக் குறித்து அதற்கு N எனப் பெயரிடுக.
- கைக்குழைச்சடி வடிவில் கீழ்பகுதியில் P புள்ளியையும் N புள்ளியையும் இணைத்து பக்கப்பொருத்தைப் பெற்றுக்கொள்க.
- N இல் இருந்து (P ஐ நோக்கி) 1 செ.மீ அடையாளமிட்டு R எனக் குறிப்பிடுக.
- L.MR என்பதை இணைத்து வட்ட வடிவில் இணைத்து குழந்தை ஆடை கீழ்பகுதி விளிம்பை அழகுபடுத்துக.

(தேவைக்கேற்றவாறு ஆடை நீளத்தை அதிகரித்துக் கொள்ளலாம்)


(தேவைக்கேற்ப ஆடையின் உயரத்தை அதிகரித்துக் கொள்ளலாம்)




உரு 10.4
குழந்தைச் சட்டையின்
முன் பகுதி

**தொழிற்பாடு - 2**
**பின்பக்கப் மாதிரி உரு**

முன்பக்க மாதிரி உரு செய்த விதத்திலேயே, சில இடங்களில் மாதிரி உருவில் உள்ள அளவீடுகளின் வித்தியாசத்தைக் கருத்திற் கொண்டு பின்பக்கமாதிரி உருவின் வடிவத்தை வரைக.




உரு 10.5
குழந்தைச் சட்டையின்
பின் பகுதி

| | |
|---|---|
| AB - | பின் பக்க கழுத்து அகலம் 4.7 cm |
| AC - | பின் கழுத்தின் ஆழம் 1cm |
| BJ - | தோளின் அகலம் 5 cm |
| JK - | தோள் சரிவு 1 cm |
| CD - | முதல் குறுக்கு அளவு 9.7cm |
| CE - | 4.5 cm |
| EF - | இரண்டாம் குறுக்களவு 10 cm |
| EG - | 6cm |
| GH - | மார்பளவு 13cm |
| HP - | 0.5cm |
| AL - | குழந்தை ஆடையின் உயரம் 30cm |
| LM - | 13 cm |
| MN - | 4.5 cm |
| NR - | 1cm |


### தையல் விடுவெளி

- கைக்குழைச்சி - 0.75cm
- தோள், கழுத்து, பொருத்து - 1cm
- பின்பக்கத் திறப்பு - 1.5cm
- கீழ்மடிப்பு பூர்த்தி முறைக்கேற்ப - 0.5 cm - 2cm


மூட்டுகளற்றோ, மூட்டுக்கள் குறைவாகவோ இருப்பது குழந்தை உடையின் இயல்பாகும் என்பதை அறிந்து கொண்டிருப்பீர்கள். மூட்டு குறைந்த ஓர் ஆடைக்கான மாதிரி உருவைத் தயாரிப்போம். அதற்காக வரைந்து கொண்ட முன்பக்க, பின் பக்க மாதிரி உருக்களை வெட்டிக்கொள்ளவும்.

### பக்கப் பொருத்தை அகற்றுதல்

முன்பக்க மாதிரி உருவின் பக்கப் பொருத்துக்கான PR கோட்டின் தையல் விடுவெளியை உட்புறமாக மடிக்க. அம்மடிப்பின் பின் பக்கமாக உள்ள மாதிரியுருவை PR கோட்டின்மீது வைத்து ஒட்டுக. அப்போது உரு 10.6 c இல் உள்ள விதத்திலான வடிவமொன்றைப் பெறலாம்.



உரு 10.6 a உரு 10.6 b



உரு 10.6 c



உரு 10.6 d

ஒப்படை -02
பல்வேறு குழந்தை உடை பாங்குகளைக் (Style) கட்டியெழுப்புக.

குழந்தை ஆடைக்கான பாங்கினைக் கட்டியெழுப்பி அதனைத் தைப்பதற்கான தேர்ச்சியையும் பெற்றுள்ளீர்கள். இப்பொழுது அதனைத் தைப்பதற்குப் பொருத்தமான துணியைத் தெரிவு செய்தல் வேண்டும். இது மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

1. பூவிதழையொத்த மிருதுவான
தோலுக்குமென்மையும் இளநிறமும்
சேர்ந்தேயுள்ள துணியை
எடுத்து நன்றே பரீட்சித்து

2. கை, கால், தலையை அசைப்பதற்கே
அணிவதற்கு இலகுவாகவே
அணிவதற்கு மகிழ்வுடனே
குறையுங்கள் அங்கு கடின தன்மையினையே

3. கழுவுவதற்கு ஈடுகொடுக்கும்
பருத்தித் துணியை தேர்ந்தே
தைக்கவும் அழகாகவே
எண்ணப்படி அழகை ரசிக்கவே

மேலுள்ள கவிதை மூலம் குழந்தை ஆடைக்கு உகந்த துணிவகையைப் பற்றி அறிந்துகொண்டிருப்பீர்கள். அதன்படி பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்.

| குழந்தை உடைக்கு உகந்த துணி வகைகளில் இருக்க வேண்டிய இயல்புகள் | இவ்வியல்புகளைக் கொண்ட துணிகளைத் தெரிவு செய்வதன் காரணங்கள் |
|---|---|
| (உ+ ம்) மிருதுவான தன்மை<br>◆<br>◆<br>◆<br>◆ | குழந்தையின் சருமம் மிருதுவானது |

அட்டவணை 10.4

நீங்கள் பூர்த்தி செய்த அட்டவணையில் பின்வரும் விடயங்கள் எல்லாம் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனப் பார்க்க.

- மிருதுவானதும் இலகுவான தன்மையும் - மென்மையான குழந்தையின் சருமத்திற்கு தீங்கு ஏற்படாதிருக்க.
- இளநிறமும் சிறிய அலங்காரங்களும் - உடலும் உடையும் சிறியது என்பதனாலாகும்.
- சலவைக்கு ஈடுகொடுத்தல் - அடிக்கடி சலவை செய்ய வேண்டியிருப்பதால்
- நன்கு உறிஞ்சும் இயல்பு - வியர்வையும் ஈரலிப்பும் உறிஞ்சப்பட்டு கூடுதலான வெப்பநிலை வெளியேற்றப்பட்டு குளிராக்கப்படுதல்.
- அவிப்பதற்கு ஈடுகொடுத்தல் } கிருமிகளை அழித்தல்
- கடும் வெயிலில் உலர்த்தல் } கிருமிகளை அழித்தல்
- கூடுதலான வெப்பநிலையிலும் மின்னழுத்தியால் அழுத்தக்கூடியதாக இருத்தல்

பருத்தித் துணியில் மேற்படி எல்லா இயல்புகளும் கிடைப்பதால் குழந்தை உடைக்காகப் பருத்தித் துணி வகையொன்றைத் தெரிவு செய்தல் மிகப் பொருத்தமானது.
குழந்தை உடைக்கு மிக உகந்த பருத்தித் துணிகளின் வர்த்தகப் பெயர்கள்.

வொயில்
மல்துணி (மல்பீஸ்)
மெல்லிய பொப்ளின்
பன்டேஜ் துணி / கான் துணி
நன்சூக்

**செயற்பாடு - 3**

குழந்தை உடை தைப்பதற்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான பட்டியலொன்றை தயார் செய்க.

## துணிகளை நேர்த்தியாக்கல் (செப்பமிடல்)

கடைகளில் வாங்கிய துணிகளில் சிலவேளை குறைபாடுகள் இருக்கலாம். இவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான முறை, துணிகளைப் நேர்த்தியாக்கல் எனப்படும்.

துணிகளைப் நேர்த்தியாக்கும்போது துணிகள் பல்வேறு செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படும். அவையாவன:

| | | |
|---|---|---|
| கழுவுதல் | - | துணியில் பசைத்தன்மை இருப்பின் முடியுமான அளவு தேய்த்துக் கழுவி நீக்குதல் மேலதிக நிறமும் நீக்கப்படும் முன் சுருக்கமும் நீக்கப்படும். |
| நேராக்குதல் | } | முலைகளை குறுக்காக இழுத்து நேர்ப்படுத்தல்.<br>குறுக்கு நூல் ஒன்றை இழுத்து அதன் வழியே துணியை நேராக வெட்டுதல். |
| அழுத்துதல் | - | கழுவுவதனால் உண்டாகும் சுருக்கங்களை நீக்கவும் கோணலை நேராக்கவும். |


**வினாக்கள்**

- குழந்தை உடையொன்றில் இருக்க வேண்டிய இயல்புகள் யாவை?
- குழந்தை உடைக்காகப் பருத்தித் துணியைத் தெரிவு செய்வதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?
- குழந்தைகளுக்காக உடை தைக்கும்போது சிறிய உருவ அலங்காரங்கள் ஏன் பயன்படுத்துகின்றனர்?


**செயற்பாடு -04**

- கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலிற்கேற்ப இச்செயற்பாடுகளில் ஈடுபடுக. மாதிரியுருவை விரிக்கும்போது
- துணி வீணாவது தடுக்கப்படுகிறது.
- மாதிரியுருவின் மத்திய மடிப்பை துணியின் மத்திய மடிப்பில் இருக்குமாறு வைத்தல் (நீள்பக்கமாக)
- மாதிரியுருவை விரிக்கும்போது மாதிரியுருவின் அனைத்துப் பகுதிகளும் அடங்குமாறு துணி மடிக்கப்பட்டிருத்தல்.
- நேர்த்தி செய்யப்பட்ட துணியில் மேல் மாதிரியுருவை விரித்து வெட்டுதல் (உரு (10.7a - 10.7b)
- தையல் இடைவெளியூடாக அடையாளமிடல் முறிந்த கோட்டினால்
- பகுதி பகுதியாக குண்டூசியை அகற்றி மாதிரியுருவைக் கழற்றி, துணியின் இருபக்கமும் படுமாறு குண்டூசி மூலம் இணைத்து அடுத்த பக்கத்திற்கும் சுவடு வரை சில்லினால் அடையாளமிடுக.

## துணியின் மீது மாதிரியுருவை இணைத்தலும் வெட்டுதலும்



10.7a




10.7b

## குழந்தை ஆடையைத் தைத்தல்

- தோற்பகுதி, பின்பக்க திறப்பு என்பவற்றை தைத்துக்கொள்ளவும்.
- 9 ஆவது அலகில் 9.6 ab உருவில் காட்டப்பட்டுள்ளவாறு அலங்கார முறையினூடாக கை, கீழ் மடிப்பு விளிம்பைத் தைப்பதன் மூலம் உடையை அழகுபடுத்துக.
- றிபன் / நாடா பிடித்துப் பின்பகுதித் திறப்பை மூடுக.


குழந்தைகளுக்கான ஆடைகளுக்கு பொருத்தமான பொருத்து **தட்டை பொருத்து** அல்லது நூலோடி சோம் பொருத்து ஆகும். எனவே, ஆடையின் தோற்பகுதியைப் பொருத்தும்போது தட்டைப்பொருத்தை பயன்படுத்த வேண்டும். தட்டைப் பொருத்து தைக்கும் முறையைக் கற்றறிவோம்.

## தைக்கும் செயலொழுங்கு




உரு 10.8a

உரு 10.8a இன் படி இரண்டு துணித் துண்டுகளையும் ஒன்றாக வைத்து பெருநூல் ஓடிய பின் சிறு நூலோடுக.




உரு 10.8b

உரு 10.8b இன்படி இரு பக்கமாகவும் விரித்து தையல் விடுவெளியில் ஒரு பக்கத்தினது மாத்திரம் சிறிதளவை வெட்டி அகற்றுக.




உரு 10.8c

உரு 10.8c துணியின் இரு பக்கங்களையும் விரித்து ஒரு பகுதியின் தையல் விடுவெளியின் உட்பக்கமாக மடித்து பொருத்தை தட்டையாகவும் மெல்லியதாகவும் இருக்கும் வண்ணம் பெரு நூலோடி சோம் தையலிட்டுப் பூரணப்படுத்துக.




உரு 10.8d

உரு 10.8d தைத்து முடிக்கப்பட்ட தட்டைப் பொருத்தில் விளிம்புத் தையல் பகுதி உடையின் பின்பகுதியில் இருத்தல் வேண்டும்.

நல்ல பக்கத்தில் தென்படுவது விளிம்பு தைப்பதற்குப் பயன்படுத்திய தையல் குறிகள் மாத்திரமே.


**உங்களுக்குத் தெரியுமா?**

- ♦ வெட்டிய உடையை ஒழுங்கு முறையாகத் தைக்க வேண்டும்.
- ♦ தோள், திறப்பு, கழுத்து, கை, கீழ்விளிம்பு அலங்காரமிடல் போன்றன படிமுறைகளுக்குப் பொருத்தமான தையல் முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- ♦ கழுத்து, கை, கீழ்விளிம்பு போன்றவற்றுக்கு ஒரே மாதிரியான தையல் முறைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.
- ♦ நாடா பிடித்தல் / றிபன் பிடித்தல் போன்றன பொருத்தமான திறப்பு முறைகளாகும்.
- ♦ அலங்காரத்திற்காக பூக்கள் அல்லது விலங்குகள் காட்டுருக்களைப் பயன்படுத்தி உடையின் அலங்காரத்தை மேம்படுத்தலாம்.


## திறப்பிற்கு நாடா தைத்தல் / றிபன் பிடித்தல்

## தைக்கும்முறை

தேவையான அளவு நீளத்தை பொருத்தமானனளவு ஆடையின் நிறத்திற்கு தேவையானவளவு றிபன் / நாடாவை தெரிவு செய்து வெட்டுக. சரியான பக்கத்தில் 0.6c.m மடிக்குக. (உரு 10.9) றிபனின் சரியான பக்கத்தில் மடித்த பகுதியை குழந்தை ஆடையின் உட்பகுதியின் விளிம்பின் மேல் 1c.m அளவில் உட்பக்கமாக இருக்குமாறும் / நாடாவின் வெளிப்பக்கமாக வைக்கவும். விளிம்பு நான்கையும் சோம் தையலால் தைக்கவும் (உரு 10.10).



உரு 10.9




உரு 10.10

## தைக்கப்பட்ட குழந்தை ஆடைகள்

குழந்தை உடைகளை அழகுபடுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய எளிய பல்வேறு அழகிய தையல் முறைகள் பல உள்ளன.

சங்கிலித் தையல், லேசிடேய்சி தையல், கம்பளித் தையல், சிப்பித் தையல் என்பன சில தையல் வகைகளாகும்.

## பொதியிடல் முறை

தைத்து முடித்த குழந்தை ஆடையை சந்தைப்படுத்தலுக்குப் பொருத்தமான முறையில் பொலிதீன் பை அல்லது பெட்டியில் அழகாகப் பொதி செய்க.



உரு 10.11 தைத்து முடிக்கப்பட்ட ஆடை

**செயற்பாடு - 4**

- ♦ பூ அல்லது சிறிய விலங்கு உருவங்கள் 5 ஐ (சிறு நூலோடல் மூலம் அலங்கரிக்கலாம்) வரைந்து அதனைத் தைக்கும் முறையை வரிப்படம் மூலம் விளக்குக
- ♦ சிறு நூலோடல் மூலம் விளம்புகளை அலங்கரிக்கும் முறைகளை வரிப்படம் மூலம் விளக்குக.


**இனி உங்களுக்கு**

- சிறுவர் ஆடைத்தொகுதிகளில் இருக்கவேண்டிய இயல்புகளை வெளிப்படுத்துவதற்கும்
- இதன்படி பொருத்தமான ஆடைப்பாங்கை தெரிவுசெய்துகொள்வதற்கும்
- அவ்வாடைத் தொகுதிக்கான மாதிரி உருவைத் தயாரிப்பதற்கும்
- அம்மாதிரி உருவைப் பயன்படுத்தி ஆடையை வெட்டிக்கொள்வதற்கும்
- பொருத்தமான எளிய தையல்முறைகளைப் பயன்படுத்தியும், எளிய அலங்காரங்களைப் பயன்படுத்தியும் ஆடைகளைப் பூரணப்படுத்திக்கொள்ள முடியுமாக இருக்கும்.

## பொழிப்பு

- குழந்தை உடை தளர்ச்சியானதாகவும் எளிமையானதாகவும் அணிவதற்கும் கழற்றுவதற்கும் இலகுவாகவும் இருக்க வேண்டும்.
- தைக்கும்போது மூட்டுகள் அற்றதாக அல்லது குறைவாகவும் எளிய பல்வேறு தையல் முறைகளால் அழகுபடுத்தலும் பொருத்தமானது.
- தைக்கும்போது குழந்தையின் சருமத்திற்கு உகந்த மென்மையான எளிமையான இளநிறமான, உறிஞ்சும் தன்மையுள்ள மிகச் சிறிய காட்டுரு கொண்ட பருத்தித்துணியை எடுக்க வேண்டும்.
- சலவையின்போது தாக்குப் பிடிக்கக்கூடியதாகவும் உறிஞ்சும் தன்மை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- துணியை வெட்ட முன் அதனை நேர்த்தியாக்கல் அவசியம்.
- உரிய ஒழுங்கு முறைப்படி தைப்பதில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.
- குழந்தையின் உடலுக்கு ஊறு விளைவிக்காதவாறு வசதியானதாக உடையை நிர்மாணித்தல் வேண்டும்.

### ஒப்படை - குறுக்கெழுத்துப் போட்டி




**இடமிருந்து வலம்**

1. உடையொன்றை சரியான முறையில் வெட்டும் போது இதனைப் பாவிக்க வேண்டும்.
2. புதிய தன்மையை ஏற்படுத்துதல்.
3. குழந்தையின் சருமம் இயற்கையானது.
5. குழந்தை ஆடைக்கான துணியைத் தெரிவு செய்யும் போது இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும்.
6. குழந்தை ஆடைக்காக இவ்வாறான தையல் முறையைப் பின்பற்ற வேண்டும்.
9. கழுவுவதற்கு பயன்படுத்தப்படும் பிரதான பொருள் ஒன்று.
10. குழந்தை ஆடைகளை துணிகளில் இருக்க வேண்டிய அம்சங்கள்.
11. அலங்காரத் தையல் முறையொன்றாகும்.

**மேலிருந்து கீழ்**

1. குழந்தை உடையில் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று.
4. நிர்மாணச் செயற்பாட்டின்போது பெரும்பாலும் இவை உபயோகிக்கப்படும்.
7. கழுவிய உடையொன்று இச்செயற்பாட்டிற்கு உட்படுத்தப்படல்.
8. குழந்தை ஆடைகளுக்கு மிகவும் பொருத்தமான துணி.
10. குழந்தை ஆடைக்குப் பொருத்தமற்ற அம்சம் ஒன்று.